**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(10.04.2024 முதல் 14.04.2024)**

**அறிக்கை எண் 029/2024** **தேதி.09.04.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 42°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 23°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 05.04.24 முதல் 08.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 39°செ முதல் 40°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 25°C முதல் 26°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 72 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 19 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-9 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை 05.04.2024 முதல் 08.04.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 14.04.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 05/04 | 06/04 | 07/04 | 08/04 | தேதி | நாள்-1 10/04 | நாள்-2 11/04 | நாள்-3 12/04 | நாள்-4 13/04 | நாள்-5 14/04 |
| 0.8 | 0.0 | 0.1 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 2 | 1 |
| 39 | 40 | 39 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 39 | 39 | 39 |
| 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 25 | 25 | 26 |
| 4 | 4 | 4 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 1 | 1 | 2 | 5 | 5 |
| 71 | 72 | 60 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 80 | 80 |
| 19 | 24 | 25 | 21 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 30 | 30 | 30 |
| 9 | 9 | 7 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 8 | 8 | 8 | 8 |
| 70 | 90 | 90 | 70 | காற்று வீசும் திசை | 70 | 50 | 90 | 70 | 70 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (10.04.2024 முதல் 14.04.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 13.04.2024 மற்றும் 14.04.2024 -ம் தேதியில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வடகிழக்கு

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **10-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **11-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **12-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **13-04-2024** | 3.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 2.0 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 |
| **14-04-2024** | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் பொதுவாக தெளிவான வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை சராசரியினைவிட 1-2 டிகிரி கூடுதலாக உயர வாய்ப்புள்ளது. உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸ் க்கு மேல் கூடுதலாக வாய்ப்புள்ளது.<br>அதே சமயம் காற்றின் ஈரப்பதம் குறைந்து வருகிறது. மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>நீர் பாசனத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் இருக்கும் இடங்களில் மண் மூடாக்கு (மண்ணின் மேற்புறத்திலுள்ள 2 முதல் 3 செ மீ ஆழத்திற்கு கிளறி விடுதல்) செய்யவும்.<br>உயர்ந்து வரும் வெப்பநிலை காரணமாக மாலைவேளைகளில் கோடை மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கம்பு | **நிலம் தயாரித்தல்** | நிலவும் வறண்ட வானிலை கருத்தில் கொண்டு இறவை கம்பு விதைப்பினை தொடர்ந்து நீர்பாசனமும் மற்றும் 3வது நாள் உயிர்நீர் பானமும் அளிக்கவேண்டும். |
| வாழை | வளர்பருவம் | பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை உயர்ந்தும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் குறைந்தும் காணப்படுவதால் மதியம் 2 மணி முதல் 3 மணி வரை உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று ஏற்பட வாய்ப்புள்ளது, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும். கால்நடைக்குடில்களைச் சுற்றிலும் ஈரமான சாக்குகளை தொங்கவிடவும். கால்நடைகளை வெயில் நேரத்தில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம். |

**குறுஞ்செய்தி**

- எதிர்பார்க்கப்படும் கோடை மழையினை பயன்படுத்தி கோடை உழவினை மேற்கொள்ளவும்.

வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை